# ஆகஸ்ட்– 06 – திங்கள்

## ஆண்டவரின் உருமாற்றம்

## ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகம் மகிழ்வதாக!

## திபா. 97:1

### முதல் வாசகம் : தானியேல்7: 9 – 10, 13 – 14

நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன. தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார் அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சு போலவும் இருந்தன. அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும் அதன் சக்கரங்கள் எரிநெருப்பாயும் இருந்தன. அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடைதோன்றிப் பாய்ந்தோடிவந்தது. பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பலகோடி பேர் அவர்முன் நின்றார்கள் நீதிமன்றம் தீர்ப்புவழங்க அமர்ந்தது. நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. இரவில் நான் கண்ட காட்சியாவது: வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர்வந்தார் அவர் திருமுன் கொண்டுவரப்பட்டார்.ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன் எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் அதற்கு முடிவே இரா. அவரது அரசு அழிந்து போகாது.

### இரண்டாம் வாசகம் : 2பேதுரு 1:16 – 19

சகோதர சகோதரிகளே!நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் பற்றி நாங்கள் உங்களுக்குத் தெரிவித்தபோது சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை ஆதாரமாகக் கொண்டு பேசவில்லை. நாங்கள் அவரது மாண்பை நேரில் கண்டவர்கள். ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று மாட்சிமிகு விண்ணகத்திலிருந்து அவரைப்பற்றிய குரல் ஒலித்தபோது, தந்தையாகிய கடவுளிட மிருந்து மதிப்பும் மாட்சியும் பெற்றார். தூயமலையில் அவரோடு இருந்தபோது விண்ணிலிருந்து வந்த இக்குரலொளியை நாங்களே கேட்டோம். எனவே, இறைவாக்கினர் கூறியது இன்னும் உறுதியாயிற்று. அவர்கள் கூறியதை நீங்கள் கருத்திற்கொள்வது நல்லது. ஏனெனில் பொழுதுபுலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும்வரை அது இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது.

### நற்செய்தி: மாற்கு 9 : 2 – 10 (நற்செய்தி வேறுபடலாம்)

ஆறு நாள்களுக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்தமலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார்.அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின.அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள்.பேதுரு இயேசுவைப் பார்த்து, ”ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்றார்.தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள்.அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட அந்த மேகத்தினின்று, ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே் இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒருகுரல் ஒலித்தது. உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத்தவிர வேறு எவரையும் காணவில்லை.அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த போது அவர், ”மானிட மகன் இறந்து உயிர்த்தெழும்வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக்கூடாது” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் இவ்வார்த்தையை அப்படியே மனத்தில் இருத்தி, ”இறந்து உயிர்த்தெழுதல்” என்றால் என்னவென்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** “என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்” கடவுளின் மாட்சியின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கியவர்தான் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து (எபி.1:3).இப்படிப்பட்ட மாட்சிமையை தன்னகத்தே கொண்ட இயேசு நம்மை மீட்க வேண்டும், பாவத்தால் கடவுளின் மாட்சியை இழந்துபோன மனித குலத்திற்கு மீண்டும் அந்த மாட்சியை மீட்டுத்தர வேண்டும் என்ற நோக்கத்துடன், தனது நிலையை விட்டுவிட்டு சாதாரண, மனிதர்களுடைய சாயலை ஏற்றுக்கொள்கின்றார். மனித குலத்தின்மீது கடவுள் கொண்ட பேரன்பு அவருடைய மாட்சியை இழக்க வைக்கின்றது. இயேசுவின் இழப்பில்தான் நாம் நிலைவாழ்வை சுவீகரித்துக் கொண்டோம். மனிதர்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட இயேசு, மனிதர்களும் அந்த கடவுளின் மாட்சியில் பங்குபெற முடியும் என்பதைக் காட்ட தன்னுடைய அன்புச் சீடர்களை மலைக்குக் கூட்டிச் செல்கின்றார். அங்கே மோசேயையும், எலியாவையும் சந்திக்க வைக்கின்றார். கடவுளின் குரலைக் கேட்கச் செய்கின்றார். அவர்களையும் இறையரசின் பங்காளர்களாக மாற்றுகின்றார். இன்று நாமும் இந்த இயேசுவின் மாட்சியின் மலை அனுபவத்தைப்பெற முதலாவதாக, நாம் மலைமேல் ஏறிச் செல்ல கற்றுக்கொள்ள வேண்டும். ‘மலை’ என்பது கடவுள் வாழுகின்ற இடம் மேலும் கடவுளின் பிரசன்னத்தைக் குறிக்கும். துதி புகழ்ச்சியின் மூலமாக தேவ பிரசன்னத்திற்குள்ளாக கடந்து செல்ல வேண்டும். இரண்டாவதாக, இறைவனுடைய சட்டங்களையும் இறைவாக்குகளையும், வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கிய இறைவார்த்தையை இரவும் பகலும் தியானிக்க வேண்டும். மூன்றாவதாக, அமைதியில் தேவனுடைய குரலைக் கேட்க பழக வேண்டும். கடவுள் நம் ஒவ்வொருவரையும் தனது சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு உருவாக்கி இருக்கின்றார். தேவபிரசன்னத்தில் நாம் அமர்ந்து அவரது குரலைக் கேட்கும்போதுதான் நாம் எதற்காக படைக்கப்பட்டிருக்கின்றோம்? நம்முடைய வாழ்வினுடைய நோக்கம் என்ன? நாம் இன்று அனுபவிக்கும் துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் எதற்காக? கடவுள் நம் வழியாக இந்த உலகத்தில் என்ன செய்ய விரும்புகின்றார்? மொத்தத்தில் ‘இறைசித்தம்’ என்ன என்பதை தேவபிரசன்னத்தில் அமர்ந்து அவரது குரலைக் கேட்கும்போதுதான் விளங்கிக் கொள்ள முடியும். கடவுள் நம்மை தாயின் கருவிலே தேர்ந்தெடுத்து, அன்புசெய்து, அவருக்கு அருகில் நெருக்கமாக வைத்து தனது மாட்சியின் அனுபவங்களை நமக்குக் கொடுத்தது எதற்காக? நாம் கடவுளுடைய சித்தத்தை நமது வாழ்வில் உணர்ந்து, அவரது குரலைக் கேட்டு, அழிந்து போய்க்கொண்டிருக்கும் ஆத்துமாக்களை தேவனுடைய இராட்சியத்திற்குக் கொண்டு சேர்க்கும் உன்னதமான பணியைச் செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதை உணர வேண்டும். இயேசுவோடு இணைந்து அவரது மீட்புப்பணியில் நாமும் பங்குபெற்று இறைமாட்சியை முடியாக அணிந்து கொள்வோம்.